அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய துணைக் கேள்வியைக் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *2006–2007* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரில் எங்களது ஜெயங்கொண்டம் தொகுதிக்கு பாலிடெக்னிக் கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டிருந்தேன். அப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அமைத்துத் தருவதாகக் கூறி, 'ஜெயங்கொண்டத்தார் ஜெயம் கொள்வார்' என்றும் சொன்னார்கள். எனவே, பாலிடெக்னிக் கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரவர்களையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, *27* பலவகைக் கல்லூரிகளை உருவாக்குவதற்கான முடிவும், உத்தரவும், நிதியும் வந்தவுடன், ஜெயங்கொண்டம் போன்ற பகுதிகளுக்கு அது விஸ்தரிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *24*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

அடுக்குமாடிப் பேருந்து

***64278—திரு. எல். ரவிச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் அடுக்குமாடிப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 ஏப்ரல் 7]

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சாலைகள் அனைத்தும் குறுகலாக மற்றும் அதிக வளைவுகள் கொண்டவையாக உள்ளன. மேலும் இச்சாலைகளின் குறுக்கே தாழ்ந்த உயரம் கொண்ட மின் கம்பிகள் அதிகமாகக் குறுக்கிடுவதால் அடுக்குமாடிப் பேருந்துகள் இயக்கிட வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எல். ரவிச்சந்திரன் அதெல்லாம் பேசக் கூடாது. கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

திரு. எல். ரவிச்சந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எல். ரவிச்சந்திரன் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகின்றன.

திரு. எல். ரவிச்சந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இப்போது டெபாசிட்டை இழந்த கட்சியாக உங்கள் கட்சி ஆகியிருக்கிறது. இனிமேலாவது அதை மாற்றிக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், உங்கள் உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் அவர்கள் தேவையே இல்லாமல், கேள்விக்கு அப்பாற்பட்ட நிலையில், தேவையில்லாததை அவையிலே பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2010 ஏப்ரல் 7

முற்பகல் 10—05

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அந்த உறுப்பினர் கேள்வி நேரத்திலே கேள்வி மட்டும்தான் கேட்க வேண்டுமே தவிர, எடுத்த எடுப்பிலே ** குற்றச்சாட்டைச் சொல்கிறார். அவருடைய கேள்வி ஆரம்பமும் தப்பு. அவருடைய பேச்சும் தப்பு. எனவே அவர்கள் சொன்னது அத்தனையையும் அவைக்குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். இது நியாயம்தானா என்று நீங்களே சொல்லுங்கள். கேள்வி நேரத்திலே *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொன்னதற்குப் பிறகு சொன்னார். நீங்கள் சொன்னதற்குப் பிறகுதான் மாண்புமிகு அமைச்சர் பொன்முடி சொன்னாரே தவிர, ஆரம்பித்து வைத்தது யார்? கேள்வி நேரத்திலே ஆரம்பிக்கும்போதே குற்றஞ்சாட்டவில்லையா? திருப்பித் தாக்கினால் தாங்கமாட்டீர்கள். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், தயவுசெய்து எல்லாரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன். *(குறுக்கீடுகள்)* திரு. செந்தில் பாலாஜி, அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் இதுவரை பேசிய பேச்சுக்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. *(குறுக்கீடுகள்)* கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி மாத்திரம் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* அவர்கள் ஒன்றும் விதியை மீறிப் பேசவில்லை. உங்கள் கட்சி உறுப்பினர்தான் விதியை மீறிப் பேசினார். *(குறுக்கீடுகள்)* கேள்வியை மட்டும் கேளுங்கள். இல்லாவிட்டால் நான் அடுத்த கேள்விக்குப் போய்விடுவேன். *(குறுக்கீடுகள்)*

திரு. எல். ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தேர்தலில் டெபாசிட் போனதைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் *(குறுக்கீடுகள்)* சரி, விடுங்கள். விடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.